ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2342/43 - 2023 ජූලි මස 28 වැනි සිකුරාදා - 2023.07.28

*2342/43 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்

### நவகத்தேகம பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தில் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, வடமேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் 2238/ 35 ஆம் இலக்கம் மற்றும் 2021, யூலை மாதம் 30 ஆந் திகதி அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள “வடமேல் மாகாணத்தின் பிரதேச சபையினால் பராமரிக்கப்படுகின்ற பாதைகள் மற்றும் ஒழுங்கைகளின் திட்டத்தினை ஒழுங்கமைத்தல் மற்றும் பெயர் பட்டியலை பிரசுரித்தல் பற்றிய கட்டளை” தொடரில் வடமேல் மாகாணத்தின் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பணிகளின் படி, 2307/ 17 ஆம் இலக்க 2022.11.24 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கு அதிகபட்சமாக இங்கு கீழுள்ள உப அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள பாதைகள், கைவிடப்பட்ட பாதைகள் மற்றும் ஒழுங்கைகள் என்று அறிவிக்கப்பட வேண்டும் என்று 2023.07.14 ஆந் திகதி நடாத்தப்பட்ட முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் பரிந்துரை இலக்கம் 182 ஆம் இலக்கத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

குறித்த உப அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதாவதொரு பாதை அல்லது ஒழுங்கை ஏதாவதொரு காணி ஊடாக அல்லது ஏதாவதொரு காணியின் ஒரு பகுதிக்கு உட்படும் என்று அக்காணிக்கு உரித்துக் கூறுபவர்களின் கூற்றாயின், குறித்த காணிக்கு தமக்குள்ள உரிமையை நிரூபிக்க இவ் அறிவித்தல் திகதி தொடக்கம் 3 மாத கால அவகாசம் முடிவதற்குள் உரிய நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இத்துடன் அறிவிக்கப்படுகின்றது.

மேலும் அவ்வாறு, குறித்த மூன்று மாத காலம் முடிவடைவதற்கு முன் அவ்வாறான வழக்கு தொடராதது குறித்த உப அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லா பாதைகளும் மற்றும் ஒழுங்கைகளும் நவகத்தேகம பிரதேச சபைக்கு சொந்தமானது என்று கருதுவதாக மேலும் அறிவிக்கப்படுகின்றது.

எம். டபிள்யூ. எல். சோமசந்திர,  
செயலாளர் மற்றும் அதிகாரப் பணிகள், கடமைகளைச்  
செயற்படுத்தும் உத்தியோகத்தர்,  
நவகத்தேகம பிரதேச சபை.

*நவகத்தேகம பிரதேச சபை அலுவலகம்,*  
*2023, யூலை 14.*

1A - PG 6406 — 07 (2023/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## தீர்மானம்

வடமேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் 2238/ 35 ஆம் இலக்கம் மற்றும் 2021, யூலை மாதம் 30 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள "வடமேல் மாகாணத்தின் பிரதேச சபையினால் பராமரிக்கப்படுகின்ற பாதைகள் மற்றும் ஒழுங்கைகளின் திட்டத்தினை ஒழுங்கமைத்தல் மற்றும் பெயர்ப் பட்டியலை பிரசுரித்தல் பற்றிய கட்டளை" தொடரில் செய்யப்பட்ட கட்டளை மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவினால் கிடைக்கப்பெற்ற அதிகாரப்படி இங்கு கீழ் உள்ள உப அட்டவணையில் உள்ளடங்கியுள்ள பெயர்ப்பட்டியலில் காட்டப்பட்டுள்ள பாதைகள் மற்றும் ஒழுங்கைகள் நவகத்தேகம பிரதேச சபையினால் பராமரிக்கப்படுகின்ற பாதைகள் மற்றும் ஒழுங்கைகளாக கருத வேண்டும் என்று நவகத்தேகம பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

### புதிதாக அடையாளம் காணப்பட்ட பாதைகளின் விபரம்

| ID | R-NUMBER | R-NAME | AUTHO-RITY | TYPE | SL/ COOR- L | ST-COOR-L | END-COOR-L | END-COOR- R | LENGTH | WIDTH | DVE-WIDTH |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 432 | NWP/NGP/ B201/8/A | தம்மென்னாவெடிய குளக்கட்டுப் பாதை | PS | GRV | 310488.345, 121212.23 | 310072.848, 121139.967 | 310491.61, 121209.052 | 310073.346, 121135.105 | 448.08 | 2.4 | 2 |
| 435 | NWP/NGP/ B19/21/C | போகஹவெவ 10 ஆம் கம்ப பாதையின் முன் பகுதி | PS | GRV | 309785.711, 125309.574 | 309787.144, 125313.539 | 309867.318, 125261.864 | 309869.098, 125265.945 | 107.2 | 3 | 2.4 |
| 436 | NWP/NGP/ B19/21/D | நுஓ, சந்தைப் பாதை, 10 ஏக்கர் பாதையின் முன் பகுதி | PS | GRV | 309775.944, 125320.391 | 309772.495, 125315.561 | 309718.839, 125400.959 | 309716.939, 125400.094 | 111.68 | 2.4 | 2 |
| 433 | NWP/NGP/ B19/21/A | நவகத்தேகம கனிஷ்ட பாடசாலைப் பாதை | PS | BP | 310095.244, 125621.322 | 310093.805, 125619.539 | 309998.829, 125738.676 | 309995.151, 125733.387 | 153.98 | 4.6 | 3.1 |
| 434 | NWP/NGP/ B19/21/B | ராஜா ஹோட்டல் அருகிலுள்ள பாதை | PS | GRV | 309925.419, 125459.479 | 309923.866, 125457.984 | 309739.749, 125615.859 | 309739.607, 125614.423 | 249.24 | 2.4 | 2 |
| 437 | NWP/NGP/ B201/9/8/A | சமுர்திகம 8 ஆம் குறுக்குப் பாதை | PS | GRV | 314078.169, 121338.074 | 314080.302, 121337.792 | 314074.276, 121125.001 | 314076.292, 121125.35 | 216.01 | 3 | 2.4 |
| 438 | NWP/NGP/ D199/6/A | ஹேமபால அவர்களது வீட்டின் அருகிலுள்ள பாதை | PS | GRV | 309897.017, 127056.495 | 309893.605, 127051.964 | 309769.368, 127278.524 | 309767.152, 127278.79 | 267.42 | 3.75 | 3 |

EOG 07- 0224